## سُوْرَةُ قُرَيْشٍ مَكِّيَّةٌ وَهِيَ اَرْبَعُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

لِاِيْلٰفِ قُرَيْشٍ ﴿١﴾ اٖلٰفِهِمْ رِحْلَةَ الشِّتَآءِ وَالصَّيْفِ ﴿٢﴾ فَلْيَعْبُدُوْا
رَبَّ هٰذَا الْبَيْتِ ﴿٣﴾ الَّذِيْٓ اَطْعَمَهُمْ مِّنْ جُوْعٍ ۙ وَّاٰمَنَهُمْ مِّنْ خَوْفٍ ﴿٤﴾ ع ١ ٢١

## سُوْرَةُ الْمَاعُوْنِ مَكِّيَّةٌ وَهِيَ سَبْعُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَرَءَيْتَ الَّذِيْ يُكَذِّبُ بِالدِّيْنِ ﴿١﴾ فَذٰلِكَ الَّذِيْ يَدُعُّ الْيَتِيْمَ ﴿٢﴾ وَ
لَا يَحُضُّ عَلٰى طَعَامِ الْمِسْكِيْنِ ﴿٣﴾ فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ ﴿٤﴾ الَّذِيْنَ هُمْ عَنْ
صَلَاتِهِمْ سَاهُوْنَ ﴿٥﴾ الَّذِيْنَ هُمْ يُرَآءُوْنَ ﴿٦﴾ وَيَمْنَعُوْنَ الْمَاعُوْنَ ﴿٧﴾ ع ١ ٢٢

## سُوْرَةُ الْكَوْثَرِ مَكِّيَّةٌ وَهِيَ ثَلٰثُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اِنَّآ اَعْطَيْنٰكَ الْكَوْثَرَ ﴿١﴾ فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ ﴿٢﴾ اِنَّ شَانِئَكَ هُوَ الْاَبْتَرُ ﴿٣﴾ ع ١ ٢٣

## سُوْرَةُ الْكٰفِرُوْنَ مَكِّيَّةٌ وَهِيَ سِتُّ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ يٰٓاَيُّهَا الْكٰفِرُوْنَ ﴿١﴾ لَآ اَعْبُدُ مَا تَعْبُدُوْنَ ﴿٢﴾

அத்தியாயம் : 106

## குரைஷ் _ குரைஷியர்

வசனங்கள் : 4 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. குரைஷியர்களுக்கு (பிரயாணத்தில்) விருப்பமுண்டாக்குவதற்காக,
2. மாரிகால, கோடைகால பிரயாணத்தில் அவர்களுக்கு விருப்பமுண்டாக்குவதற்காக (யானைப்படையினரை அழித்து கஃபாவை அல்லாஹ் காப்பாற்றினான்).
3. எனவே (கஅபாவாகிய) இவ்வீட்டின் இரட்சகனையே அவர்கள் வணங்குவார்களாக!
4. அவன் எத்தகையவனென்றால், (இந்த வர்த்தக பிரயாணத்தின் மூலம்) பசிக்கு அவர்களுக்கு உணவளித்தான்; மேலும் அவர்களுக்கு (பிறரால் ஏற்பட்டுக் கொண்டிருந்த) பயத்திலிருந்து அவன் அபயமளித்தான்.

அத்தியாயம் : 107

## அல் மாஊன் _ அற்பப்பொருள்

வசனங்கள் : 7 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே! மறுமையில் நல்லவற்றுக்கு நற்கூலியும், தீயவைக்கு தண்டனையும் வழங்கப்படும்) நியாயத்தீர்ப்பை பொய்யாக்குவோனை நீர் (கவனித்துப்) பார்த்தீரா?
2. ஆகவே, அத்தகையோனே அனாதைகளை (ஈவிரக்கமின்றி) விரட்டுகிறான்.
3. அவன் ஏழைக்கு உணவளிக்கத் தூண்டுவதுமில்லை,
4. எனவே, தொழுகையாளிகளுக்குக் கேடுதான்;
5. அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையை நிறைவேற்றுவதை விட்டு பராமுகமாக இருப்பார்கள்.
6. அத்தகையோர்தான் (மற்றவர்களுக்குக்) காண்பிக்(கவே தொழு)கிறார்கள்.
7. மேலும், (அன்றாடம் உபயோகமாகும்) அற்பமான பொருட்களை (மற்றவர்களுக்குக் கொடுப்பதை விட்டும்) தடுக்கிறார்கள்.

அத்தியாயம் : 108

## அல்கவ்ஸர் _ எண்ணற்ற நன்மைகள்

வசனங்கள் : 3 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) நிச்சயமாக நாம் கவ்ஸரை (எண்ணற்ற நன்மைகளை) உமக்குக் கொடுத்திருக்கின்றோம்.
2. ஆகவே, நீர் உமதிரட்சகனைத் தொழுது, இன்னும் (குர்பானியும் கொடுத்து அதை) அறுப்பீராக.
3. நிச்சயமாக உம்பகைவன் (எவனோ) அவன்தான் சந்ததியற்றவன்.

அத்தியாயம் : 109

## அல் காஃபிரூன் _ நிராகரிப்போர்

வசனங்கள் : 6 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: நிராகரிப்போரே!
2. நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன்.